மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

25.11.2022 வெள்ளிக்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

## வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்

### அரசாங்கத்தினை எச்சரித்தார் சாணக்கியன்

வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று (வியாழக்கிழமை) உரையாற்றிய போதே அவர் ,வ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இனி போராட்டத்தில் ஈடுபட்டால் இராணுவத்தை கொண்டு போராட்டத்தை அடக்குவேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இலங்கை சிவில் பிரஜைகள் தான் இராணுவத்திலும், பாதுகாப்பு தரப்பிலும் சேவையாற்றுகிறார்கள்

02

## தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க வேண்டும்

**(வி.ரி.சகாதேவராஜா)**

எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தனது இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகத்தை உண்மையிலே மதிப்பதாக இருந்தால் தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ் தேசிய தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க வேண்டும் .

இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சாந்தன் தெரிவித்தார். ஜனநாயக போராளிகள் கட்சியினர் போராளிகளின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வை நேற்று முன்தினம் (24) வியாழக்கிழமை வெல்லாவெளியில் நடத்தினர் .

மட்டு.அம்பாறை தலைமையகத்தில் கட்சியின் உப தலைவர் என். நகுலேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் . இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றவர்கள் சேர்ந்து கதறியழுத வண்ணம் ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி ஆக வணக்கத்தை

02

## பிரதமர் பதவிவேண்டும் என ராஜபக்சர்களிடம் மலர்த் தட்டை ஏந்திச் செல்லவில்லை

### ஜனாதிபதிக்கு சஜித் வழங்கிய பதில்



பிரதமர் பதவியை பொறுப்பேற்க தான் ராஜபக்சர்களிடம் மலர்த் தட்டை ஏந்திச் செல்லவில்லை எனவும்,கோட்டாபய ராஜபக்ச விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க எழுத்துப்பூர்வமாக பகிரங்கமாக தனது பதிலைத் தெரிவித்ததாகவும்,இது கட்சியின் பாராளுமன்ற குழு,ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணிக் கட்சிகளின் கூட்டுப் உடன்பாடு மற்றும் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று(25) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாம் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை மாத்திரம் முன்வைத்த வன்னம் ஜனாதிபதி உண்மையான நிலைப்பாடுகளை திரிபுபடுத்தியுள்ளார் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,தான் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி நிபந்தனைகளுடனையே உரிய கோரிக்கையை முன்வைத்ததாகவும் அவர் தெரிவித்தார். நிபந்தனையின்றி பட்டம் பதவி சலுகைகளை ஏற்றுக் கொள்வதற்காக தான் ஒருபோதும் செயற்படவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அவ்வாறான பதவி வெறி தனக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணிக்கோ இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியிலான மக்கள் போராட்டமும், வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குத் தீவைத்த கீழ் தர நடவடிக்கையும் ஒன்றல்ல வேறுபட்டவை என

02

## இன்று தீர்வைப் பெறாவிட்டால் ஒரு காலமும் பெறமுடியாமல் போகலாம்

### காரைதீவு தவிசாளர் ஜெயசிறில்

**( வி.ரி.சகாதேவராஜா)**

தாயக மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தமது இன்னுயிரை தியாகம் செய்த மாவீரர்களின் ஆத்மா சாந்தியடையும் காலம் கனிந்திருக்கின்றது. இதனை சகல தமிழ்ப்பிரதிநிதிகளும் மனதில் வைத்து ஒன்றுபட்டு, ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அந்த தீர்வை வென்றெடுக்க முன்வரவேண்டும் .

இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளரும், பிரபல சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார் . ஜனநாயக போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தலைமையில் வெல்லாவெளியிலுள்ள மட்டு.அம்பாறை தலைமையகத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று (24)வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றவர்கள் சேர்ந்து கதறியழுத

02



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்றைய தினம் திருகோணமலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கலந்துகொண்டிருந்தமை விசேட அம்சமாகும். (சுமன்)




## முத்து சிவலிங்கத்தின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது




**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பிரதியமைச்சரும் சிரேஸ்ட தொழிற்சங்க தலைவருமான முத்து சிவலிங்கத்தின் பூதவுடல் நேற்று முன் தினம் மாலை (24) அக்கினியுடன் சங்கமமாகியது.

அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், கட்சி தொண்டர்கள் , பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோரின் பங்களிப்புடன் இறுதி நிகழ்வுகள் நடைப்பெற்றன. இறுதி நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ரமேஸ்வரன், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற

02

“கல்விக்கு கைகொடுப்போம்”

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

# அறிவாலயம்

அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடம்

**மேற்படி பதவிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சமூகப்பணி செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்பட்டுவரும் அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்திற்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன.**

### எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

#### அடிப்படை கல்வித் தகமை

1. சா.த பரீட்சையில் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி உட்பட ஆறு பாடங்களில் சித்தி
2. உ.தரத்தில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சிறப்பு சித்தி

#### ஏனைய தகைமைகள்

1. உளவியல் அல்லது உளசமூக மேம்பாடு அல்லது சமூகவியல் கற்கைகளில் சான்றிதழ் மற்றும் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடலை மேற்கொள்ள கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. கணனியில் **NVQ** மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது கணனித்துறையில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
4. பயிற்சி வகுப்புகள் உள்ள தினங்களில் சனி ஞாயிறு விடுமுறை தினங்களிலும் வேலை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்
5.வயது 25-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
6. மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
7.மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8.மாதாந்தம் சகல படிகளுடன் 35000ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

*தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை **arivalayam@hotmail.fr** என்ற மின்னஞ்சலுக்கு எதிர்வரும் மார்கழி 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.*

**Founder**
**Arivalayam foundation trust**
**Pandariyaveli**
**Kokkaddicholai**
**Batticoloa**
**Srilanka**

## வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் ஈடுப்படுவார்கள்

என்பதை ஜனாதிபதி தெரிந்துக் கொள்ள வேண்டும்.

ராணுவத்தினரும் பொருளாதார பாதிப்பை எதிர்க்கொண்டுள்ளார்கள் என்பதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும். ,ராணுவத்தை கொண்டு போராட்டத்தை அடக்க வேண்டுமாயின் ஜனாதிபதி ,ந்தியா, சீனா ஆகிய நாடுகளில் ,ருந்து ,ராணுவத்தை வரவழைக்க நேரிடும். ,ராணுவத்தினரும் பொருளாதார பாதிப்பை எதிர்க்கொண்டுள்ளார்கள். வெகுவிரைவில் முப்படையினரும் போராட்டத்தில் ஈடுப்படுவார்கள். ஆகவே போராட்டத்தை முடக்குவது குறித்து அவதானம் செலுத்துவதை விடுத்து பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண அவதானம் செலுத்துமாறும், அதற்கு கட்சி என்ற ரீதியில் ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிட்டுள்ளோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நாட்டை மாத்திரமல்ல, இராணுவத்தையும் ,ல்லாதொழித்து சென்றுள்ளார் என இராணுவத்தினர் குறிப்பிடுகிறார்கள். கோட்டபய ராஜபக்ஷ கால்வாய், சுத்தப்படுத்துவதற்கும், கட்டடம் அமைப்பதற்கும், வீதி நிர்மாணிப்புக்கும் ,ராணுவத்தை பயன்படுத்தினார். அமுதா கத என்ற விசேட படையணியை உருவாக்கி 40 ஆயிரம் பேரை இணைத்துக்கொண்டு தனது இராணுவ நிலைப்பாட்டை மேம்படுத்தினார்.

இதன்பிறகு விவசாயத்துறை தொடர்பில் படையணியை ஸ்தாபித்து விவசாயத்தையும் முழுமையாக இல்லாதொழித்தார். நான் இராணுவத்தை அவமதிக்கும் வகையில் செயற்படவில்லை. இன்று இராணுவத்திற்காக வரிந்துக் கொள்பவர்கள் இராணுவத்தின் சம்பளம் தொடர்பில் கருத்துரைக்கவில்லை. 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்தினரது சம்பள அதிகரிப்புக்காக 20 பில்லியன் ரூபா மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராகிய எமக்க ஒன்றும் தெரியாது. தெரிந்தவர்களினால் நாடு சீரழிந்துள்ளது. இருப்பதையும் சீரழிக்க வந்துள்ளார்கள். ,இாணுவத்தினரை விற்கு பிழைத்து அரசியல் செய்யும் தரப்பினர் ,ராணுவத்தினரது சம்பளம் பற்றி கருத்துரைக்கவில்லை.“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க வேண்டும்

மேற்கொண்டார்கள். அங்கு பிரதமர் அதிதியாக தமிழ் தேசிய கூட்டமைப்மைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார் .சிறப்பு அதிதியாக போரதீவுப் பற்று பிரதேச சபை உறுப்பினர் தம்பி பிள்ளை தியாகராஜா கலந்து கொண்டார். அங்கு சாந்தன் மேலும் உரையாற்றுகையில்...

நாம் எமது மண்ணில் யாருடைய அச்சுறுத்தல் இல்லாமல் சுதந்திரமாக எங்களை நாம் ஆளக்கூடிய ஒரு அதிகாரத்தை கோரி போராட்டத்தை நடத்தி வந்தோம். இந்த மக்கள் விடுதலைக்காக இந்த மண்ணின் விடுதலைக்காக எமது மாவீரர்கள் பல வடிவங்களில் தியாகங்களை செய்தார்கள் . எனவே அந்த மாவீரர்களின் தியாகங்கள் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் சுயாட்சியுடன் கூடிய ஒரு தீர்வை நாங்கள் எட்ட வேண்டும். நாங்கள் ஆயுத போராட்டம் அரசியல் போராட்டம் என்று இரண்டு கோணங்களிலே அன்று போராட்டங்களை நகர்த்தி இருந்தோம். 2009 இல் ஆயுதப் போராட்டம் மௌனித்தது. இருந்தபோதிலும் அரசியல் போராட்டம் என்பது தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றது . இந்த மாவீரர் தின நிகழ்வில் அரசியல்வாதிகளுக்கு ஒன்றைக் கூறி வைக்க விரும்புகிறேன்.

தமிழ் மக்களின் அபிலாசைகளோடு மாவீரர்களின் அபிலாசைகளோடு விளையாட வேண்டாம். தமிழ் தேசிய பரப்பில் இருக்கக் கூடிய தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். நான் பெரிதா ?நீ பெரிதா ?என்று தூக்கிப் பிடித்துக் கொண்டு அலைய வேண்டாம். நீங்கள் கெட்டிக்காரர்களாக பலவான்களாக இருக்கலாம் .ஆனால் எமது நோக்கங்கள் எல்லாம் ஒன்று என்பதை மறந்து விடக்கூடாது .நான் சொல்வது தமிழ் பிரதிநிதிகள் என்னும் பொழுது சிங்கள கட்சிகளில் இருக்கின்ற தமிழ் பிரதிநிதிகளை குறிப்பிடவில்லை .

தமிழ் தேசிய பரப்பில் உள்ள தமிழ் கட்சிகளை குறிப்பிடுகின்றேன். தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற தமிழ் பிரதிநிதிகள் தங்களது சுயலாபம் சுய கொள்கைகளை புறந்தள்ளிவிட்டு நீங்கள் ஒரு குடையின் கீழ் மாவீரரின் தியாகத்துக்காக ஒன்றிணைங்கள். என்று கேட்டுக் கொள்கின்றேன் .

இன்று ஜனாதிபதி ரணில் தமிழ் மக்களை பேசஅழைத்து இருக்கின்றார். இந்த இடத்திலே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றாக இணைந்து அந்த பேச்சு வார்த்தையை மேற்கொண்டு நாம் எதிர்பார்த்த அந்த தீர்வை அடைய வேண்டும் . அடுத்து மக்களுக்கான ஒரு வேண்டுகோள். மக்களே தேர்தல் வரப் போகிறது. பலரும் வருவார்கள். அற்பசொற்ப சலுகைகளுக்கு சோரம் போகாதீர்கள் .வாக்கு கேட்டு வரும் எல்லோருக்கும் வாக்களிக்க வேண்டாம். தமிழ் தேசிய உணர்வோடு தமிழ் தேசியத்துக்கு மாத்திரம் வாக்களியுங்கள். உங்களது பிள்ளைகளின் தியாகத்தை நெஞ்சில் நிறுத்தி உங்கள் பிள்ளைகள் எதற்காக இந்த மண்ணிலே ஆகுதியானார்களோ அதை நினைத்து வாக்களியுங்கள் .

தமிழ் தேசிய கட்சியில் வருகின்ற வேட்பாளர்களை ஆதரித்து எமது அவிலாசைகளை வென்றெடுக்க வேண்டும். என்றார். இறுதியில் மாவீரர்களின் பெற்றோர் உலருணவு மதிய உணவு மற்றும் தென்னம்பிள்ளை வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

## பிரதமர் பதவிவேண்டும் என ராஜபக்சர்களிடம் மலர்த் தட்டை ஏந்திச்

தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இதுபோன்ற பயங்கரவாதச் செயல்களுக்கு தான் முற்றிலும் எதிரானவன் எனவும்,ஜனநாயகப் போராட்டங்களுக்கு நிபந்தனையின்றி சார்பாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகள்

1- குறுகிய காலப்பகுதிக்குள் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதற்கு இணக்கம் தெரிவித்தல்.

2- இரண்டு வார காலத்திற்குள் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை கொண்டு வருதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

3 -எம்மால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கச் செய்யும் வகையில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயதானங்களுக்கமைய மிகக்குறுகிய காலத்திற்குள் சகல கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் நடைமுறைப்படுத்தல்.

4 -மக்களுடைய வாழ்க்கை முறையை வழமை நிலைக்கு கொண்டு வருவதுடன்,சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்து மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்ட அரசியலமைப்பு திருத்தங்களை நடைமுறைப்படுத்திய பின்னர் ஸ்தீரமான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு மக்களுக்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் பாராளுமன்ற தேர்தலை நடாத்துதல்.

## முத்து சிவலிங்கத்தின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது

உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், இ. தொ. கா. தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்தியமாகாண சபை உறுப்பினருமான ஏ. பி. சக்திவேல், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரட்ணாயக்க, முன்னாள் நீதி சட்ட மறு சீரமைப்பு பிரதியமைச்சர் வடிவேல் புத்திரசிகாமணி, முன்னாள் மத்தியமாகாண சபை உறுப்பினர்களான பிலிப், கணபதி கனகராஜ், நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சிசபை தலைவர்களான வேலு யோகராஜா, செம்பகள்ளி உட்பட முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபை தலைவர்கள் உறுப்பினர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள்,நுவரெலியா வர்த்தகர்கள் பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்துக்கொண்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , பிரதமர் தினேஸ் குணவர்தன,எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய ஆகியோரின் இரங்கல் செய்திகள் வாசித்து காட்டப்பட்டன. அவரின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக நுவரெலியாவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் (24) மாலை 4 மணியளவில் அங்கிருந்து நுவரெலியா நகர் வீதி வழியாக எடுத்துச்செல்லப்பட்டு நுவரெலியாவிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் காரியாலயத்திற்கு கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து நுவரெலியா பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மாலை 6 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# ஓட்டமாவடி - மஜ்மா நகரில் யானை தாக்கி வயோதிபர் மரணம்

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

யானை தாக்கி நபரொருவர் மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் ஓட்டமாவடி – மஜ்மா நகர் பகுதியில் வைத்து இன்று (25) காலை இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி – மீராவோடை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையான எஸ். எம். காசிம் என்பவர் மஜ்மா நகரிலுள்ள அவரது தோட்டத்திற்கு சென்ற போதே அவர் யானை தாக்கி மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மனித எச்சங்களை அனுராதபுரம் நீதவான் முன்னிலையில் பகுப்பாய்வுக்கு தெரிவு செய்ய மன்னார் நீதிமன்றம் அனுமதி

**( வாஸ் கூஞ்ஞ)**

அமெரிக்கா புலோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்காக கொண்டு செல்வதற்கு மாதிரி தெரிவு செய்வதற்கான கட்டளை ஆக்கப்பட்டிருந்த நிலையில் அனுராதபுரம் நீதவான் முன்னிலையில் மேற்பார்வை செய்து அதற்கான மாதிரிகளை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் முன் பாரப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக இதன் அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீதவான் கையொப்பம் இட்டுள்ளார்.

மன்னார் திருக்கேதீஸவரம் மனித புதைகுழி வழக்கு வியாழக்கிழமை (24.11.2022) மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் அப்துல் சமட் கிப்துல்லா முன்னிலையில் விசாரனைக்காக எடுக்கப்பட்டது. இது தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக மன்றில் ஆஜராகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ்.நிரஞ்சன் இவ் வழக்கு தொடர்பாக தெரிவிக்கையில்

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் திருக்கேதீஸ்வரத்தின் மனித புதைகுழி வழக்கு இல. பி768 – 2013 ஆம் ஆண்டுக்கான வழக்கு நீதவான் அப்துல் சமட் கிப்துல்லா முன்னிலையில் விசாரனைக்காக 24.11.2022 அன்று வியாழக்கிழமை எடுக்கப்பட்டபோது இவ் வழக்கில் ஏற்கனவே கட்டளை ஆக்கப்பட்டிருந்தது

அதாவது மன்னார் திருக்கேதீஸ வரத்தில் கண்டபிடிக்கப்பட்டு மனித புதைகுழியிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் ஏற்கனவே அனுராதபுரம் வைத்தியசாலையில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் எச்சங்களின் மாதிரிகளை எடுத்து சீ 14 காபன் பரிசோதனைக்கு அமெரிக்கா புலோரிடா நிறுவனத்துக்கு காபன் பரிசோதனைக்காக கொண்டு செல்வதற்கு மாதிரி தெரிவு செய்வதற்கான கட்டளை ஆக்கப்பட்டிருந்தது. அத்துடன் அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வழக்கு தொடுனர்களால் மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதற்கமைவாக கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களிலிருந்து மாதிரிகளை தெரிவு செய்வதற்கான நடைமுறைகளை அனுராதபுரம் நீதவான் முன்னிலையில் மேற்பார்வை செய்து அதற்கான மாதிரிகளை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் முன் பாரப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைவாக வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச தரப்பினரால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதாவது இதற்கான அனுமதியை கனம் நீதிபதி அவர்கள் வழங்குமாறு முன்வைக்கப்பட்டது. இதற்கமைய இதன் அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீதவான் கையொப்பம் இட்டுள்ளார். இதன் அடிப்படையில் அனுராதபுரம் நீதவான் முன்னிலையில் அரச தரப்பு சட்டத்ரனிகளால் மார்கழி மாதம் 5ந் திகதி சமர்ப்பணம் ஒன்று சமர்பிக்கப்பட இருக்கின்றது. அத்தோடு இவ் வழக்கானது இதன் நடவடிக்கைக்காக மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் 2023.02.09ந் திகதி மீண்டும் அழைக்கப்பட இருக்கின்றது

இவ் வழக்கில் அரசு தரப்பு சார்பாக சமந்த விக்கிரமசிங்க , இவ் மனித புதைகுழி அகழ்வுக்கு தலைமைதாங்கி ஈடுபட்ட சட்ட வைத்திய அதிகாரி வைத்தியரத்தின மற்றும் ஹேவகே ஆகியோருடன் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த குற்ற புலணாய்வு பிரிவினரும் மன்றில் ஆஜராகி இருந்தனர் அத்தோடு காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகம் சார்பில் சட்டத்தரணி திருமதி எஸ் புராதினியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரனி வீ.எஸ்.நிரஞ்சன் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து மாந்தை பகுதிக்கு நிலத்தடியின் ஊடாக குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தில் ஆலய வீதிக்கு அருகாமையில் 2013 ஆம் ஆண்டு நீர் வழங்கல் சபையினால் குழாய்கள் பதித்துச் சென்றபோதே இவ் மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.




# ஊடகவியலாளர்களின் தொழில்முறை உரிமைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய ஆய்வு வெளியீடு





இலங்கையில் ஊடகத்துறையின் தொழில்முறை தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் சுதந்திர ஊடக இயக்கம் இலங்கையில் ஊடகவியலாளர்களின் தொழில்முறை உரிமைகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து மேற்கொண்ட ஆய்வறிக்கை இன்று (24) கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது. சுதந்திர ஊடக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் லசந்த டி சில்வா தலைமையில் கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் இன் நிகழ்வு நடைபெற்றது.

இவ் ஆய்வறிக்கையானது ஊடக்துறை அமைச்சின் மேலதிக செயலாளரிடம் சிரேஸ்ட ஊடகவியலாளர்களான சி தொடாவத்த, சுனில்ஜயசேகர ஆகியோர் வழங்கி வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில், சுகாதாரத் தொழிற்துறைக் கல்விமான்கள் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் , சட்டத்தரணி பிரியலால் சிறிசேன, சிரேஸ்ட ஊடகவியலாளர் சுனில் ஜயசேகர ஆகியோர் பங்கு கொண்ட கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. நிகழ்வில், இலங்கையின் அனைத்து பிரதேசங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். இதன்போது ஆய்வினை மேற்கொள்ளட சிரேஸ்ட ஊடகவியலாளர் சிதொடாவத்த ஆய்வு தொடர்பாக விளக்கமளித்தார். இதன்போது பிரதேச ரீதியாகவுள்ள செய்தியாளர்கள், கொழும்பு உள்ளிட்ட இடங்களிலுள்ள தேசிய பிரதான ஊடகங்களில் பணியாற்றுபுவர்கள் வரையுள்ள பிரச்சினைகள், தீர்வுகள் குறித்து விபரித்தார்.



## இன்று தீர்வைப் பெறாவிட்டால் ஒரு காலமும்

வண்ணம் ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி ஆக வணக்கத்தை மேற்கொண்டார்கள். அங்கு பிரதமஅதிதியாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார் .சிறப்பு அதிதியாக போரதீவுப் பற்று பிரதேச சபை உறுப்பினர் தம்பி பிள்ளை தியாகராஜா கலந்து கொண்டார்.

அங்கு ஜெயசிறில்மேலும் உரையாற்றுகையில், ஒட்டுமொத்த தமிழினத்திற்காக இன்னுயிர்களை ஆகுதி செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவதற்கு கடந்த காலங்களில் பல தடைகள் விதிக்கப்பட்டன. இன்று ஓரளவுக்கு அது தணிந்திருக்கின்றது.

நாட்டிலே தமிழர்களை அடக்க வேண்டும், ஒடுக்க வேண்டும், சுதந்திரத்தை நசுக்க வேண்டும் என்று சிங்கள பேரினவாதம் புறப்பட்டபோது தான் தமிழர்கள் ஆயுதம் ஏந்தினார்களை தவிர ஏனைய இனங்களை வஞ்சிக்க வேண்டும், நசுக்க வேண்டும் என்ற சிந்தனை ஒருபோதும் இருந்ததில்லை .சிங்கள மக்கள் எமக்கு எதிரிகள் அல்ல .அவர்கள் நண்பர்கள் . இன்று எமது போராட்டத்தை அவர்கள் உணரத் தொடங்கி இருக்கின்றார்கள் .நாம் ஜனநாயக ரீதியாக, சுயநிர்ணயத்துடன் கூடிய அரசியல் தீர்வு கிடைப்பதற்காக போராடினோம். இன்று அதற்கான சமிக்ஞையை தற்போதைய ஜனாதிபதி ரணில் வெளியிட்டு இருக்கின்றார் . இதனை நாங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் .

அன்று 2009இல் யுத்தத்தை வென்று விட்டோம் புலிகளை அழித்துவிட்டோம் என்று மார்தட்டிய அரசாங்கம், இன்று போதைப்பொருள் என்ற அரக்கனை ஒழிக்க முடியாமல் போனதன் காரணம் என்ன ? அன்று வடகிழக்கில் எந்த இடத்திலும் இந்த போதைப்பொருள் பாவனை , பாலியல் துஸ்பிரயோகம் என்பன மருந்துக்கும் கிடையாது. பிரபாகரனின் நிர்வாகம் சிறந்த நிர்வாகம் என்கிறார்கள். இதனை நாங்கள் சொல்லவில்லை . சிங்கள மக்களே சொல்லுகின்றார்கள். சிங்கள பிரதிநிதிகள் சிங்கள ஊடகங்கள் பறைசாற்றுகின்றன. அந்த அளவுக்கு மாவீரர்களின் ஒழுக்கம் கடமை மதிக்கப்படுகின்றது.

சர்வதேசத்திலும் இது சொல்லப்படுகின்றது.

**சத்தம் இல்லா யுத்தம்!**

ஆனால், இன்று சத்தம் இல்லாமல் ஒரு யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.அதுதான் போதைப்பொருள் பாவனை. மக்கள் மத்தியில் மட்டுமல்ல, மாணவர் மத்தியிலும் அது தலை விரித்து ஆடுகின்றது. இதனை யார் செய்கின்றார்கள் என்பதனை மக்கள் அறிவார்கள் .எனவே கவனமாக இருக்க வேண்டும் . நாங்கள் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல. நாங்கள் ஒரு தேசிய இனம் எமக்கென்று கலாச்சாரம் எமக்கென்று ஒரு பிரதேசம் .அதனைத் தான் நாங்கள் கேட்கின்றோம்.

உலகிலேயே வீரமிக்க ஒரு போராட்டத்தை நடத்தியது தமிழர்களே என்ற பதிவு இன்றும் இருக்கின்றது.

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக மாவீரர்கள் தமது உயிரை தியாகம் செய்து இருந்தார்கள்.

அவர்களது அந்த தியாகத்துக்கு நாங்கள் மதிப்பளிக்க வேண்டுமாக இருந்தால் ஜனாதிபதி கூறிய அந்த அரசியல் தீர்வை நாங்கள் பேசி பெற்றுக் கொள்ள வேண்டும். நான் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அல்ல மாவீரர்களின் பெற்றோர்கள் சார்பாக இந்த கோரிக்கையை விடுகின்றேன் . அதாவது மாவீரர்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாக இருந்தால் அந்த தீர்வை நாங்கள் பெற வேண்டும் .இன்று அந்த தீர்வை பெறாவிட்டால் ஒரு காலமும் பெற முடியாமல் போகலாம். எனவே தமிழ் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய அத்தனை தமிழ் பிரிதிகளும் தங்களது சுய கௌரவம், வரட்டுக் கௌரவம், சுய கொள்கைகளை எல்லாம் விட்டுவிட்டு இந்த வடகிழக்கு மக்களுக்காக, மாவீரர்களுக்காக ஒன்றுபடுங்கள். கடந்தவை கடந்தவை யாக இருக்கட்டும். அரசுக்கு வால் பிடித்து இன்னும் இன்னும் துரோகிகளாக மாறாதீர்கள். மாவீரர்களை தேசிய வீரர்களாக போற்றி அவர்களுக்கு மரியாதை செலுத்துவோமாக. நிகழ்வில் மாவீரர்கள் பெற்றோர்களுக்கு கௌரவிப்பு இடம்பெற்றது . மதிய உணவு வழங்கி உலர் உணவுப்பொருள் மற்றும் தென்னம் பிள்ளைகளும் வழங்கப்பட்டன. முன்னாள் போராளிகள் பெற்றோர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வை முன்னாள் போராளி கோபால் உணர்வு பூர்வமாக தொகுத்து வழங்கினார்.

# நாளை கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தல்

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் நாளை மறுநாள்(27) ஞாயிற்றுக்கிழமை மாலை மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு நடைபெற இருக்கின்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மாவீரர் பணிக்குழு மன்றம் முன்னெடுத்து இருக்கின்றது.

மொத்தமாக 856 வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன , இறுதி யுத்த நிலமையின் பேது மடிந்தவர்களையும் இணைத்து மொத்தமாக 1000 பேருக்கான நினைவேந்தல் ஏற்பாடுகள் அம்பாறை மாவட்டத்தின் சகல பாகங்களில் இருந்து போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது அதேபோல் அங்கு இரவு போசனமும் வழங்கப்படுவதற்கும் தென்னம்பிள்ளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மக்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என குழுவினர் தெரிவித்தனர்.

# முடிந்தால் ஆதாரங்களை வெளியிடுங்கள் பிள்ளையானுக்கு சாணக்கியனின் செயலாளர் சவால்



தனது பெயரில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவில் காணிகள் உள்ளன என்றால் அதற்கான ஆதாரங்களை இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் வெளியிட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பிரத்தியேக செயலாளர் விமலநாதன் மதிமேனன் சவால் விடுத்துள்ளார். வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், 'கடந்த 22.11.2022 ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஓந்தாச்சிமடம் கிராமத்தில் எனது தனிப்பட்ட பெயரிலே சுமார் 7 ஏக்கர் அரச காணியை முறையற்ற விதத்தில் கையகப்படுத்தியுள்ளேன் என தனது நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்டார். இதனை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். உரிய ஆதாரங்கள் இன்றி உயரிய சபையில் எனக்கு எதிராக இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும் எனது தனிப்பட்ட நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்துவதாக இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானின் நாடாளுமன்ற உரை அமைந்துள்ளது. குறித்த மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகத்தில் எனது பெயரில் எந்த விதமான அரச காணியும் இல்லை என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன். மேலும், குறித்த காணி எனது பெயரிலே நான் நிர்வகிக்கின்றேன் என்றால் அதற்கான ஆதாரத்தை வெளியிட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையனுக்கு பகிரங்கமாக சவால் விடுகின்றேன்.

இது தொடர்பான பொய்யான செய்தியை வெளியிட்ட த.ம.வி.பு.க ஊடகமான டியவவை வள இற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக களுவாஞ்சிகுடி பொலிசாரிடம் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலையடிவேம்பு பிரதேச கண்ணகி கிராம இந்து மயானத்தில் மாபெரும் சிரமானப்பணி



**ம.கிரிசாந்**

அமைப்பின் தலைவர் க.சுந்தலிங்கம் தலைமையில் அமைப்பின் ஆலோசகரும் ஓய்வு பெற்ற அம்பாரை மாவட்ட உள்ளக கணக்காய்வாளர் எஸ்.கனகரெத்தினத்தின் வழிகாட்டலில் இடம்பெற்ற சிரமதானப்பணியில் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். குறித்த சிரமதான செயற்பாட்டிற்கு கண்ணகிகிராம பொதுமக்கள், கண்ணகிகிராம விவசாய சமூகம் மற்றும் பிரதேச சமூக அமைப்புக்கள் தங்கள் ஆதரவை வழங்கி சிரமதானத்திலும் கலந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிரமதான செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட கண்ணகிகிராம பிரதேசத்தில் அண்மைக்காலமாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதுடன் யானை தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பெண் பிள்ளைகளின் தாயான குடும்பபெண் ஒருவர் உயிரிழந்தமை காரணமாக பிரதேச மக்கள் சோகத்தில் காணப்படுகின்ற நிலையில், யானைகளின் வருகையை மட்டுப்படுத்தப்பட்ட முறையில் தடுக்கும் நோக்குடன் குறித்த சிரமதான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

# இன்று கல்முனையில் ஆர்ப்பாட்டம்



கல்முனை ரெலிகொம் நிறுவன ஊழியர்கள் இன்று (24) வெள்ளிக்கிழமை அகில இலங்கை ரீதியில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கல்முனை டெலிகொம் நிலையத்திற்கு முன் பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம் செய்வதை காணலாம். **(படங்கள் காரைதீவு குறூப் நிருபர் சகா)**

# திருகோணமலையில் திட்டம் தயாரிப்பு செயலமர்வு



**பொன்ஆனந்தம்**

திருகோணமலை பட்டணமும் சூழலும்பிரிவு பிரதேச சபையின் சமூக பிரதிகளுக்கான செயற்றிட்டமுன்மொழிவு தயாரித்தல் தொடர்பான செயலமர்வு சபையின்செயலாளர் திருமதி. நரேந்திரநாத் யாழினி,தலைமையில் காலை 9.30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகிறது.இங்கு வளவாளராக அன்பழகன் குரூஸ் கலந்து கொண்டு நெறிப்படுத்துகின்றார். இந்நிகழ்வு தொடர்ந்து நாளையும் நடைபெறவுள்ளது. அகத்தின் இணைப்பாளர். பொ. சற்சிவானந்தம் திட்ட விளக்க உரையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் கதிர்காமநாதன் சிவகுமார், கிருஸ்ணபிள்ளை தயானந்தன் உள்ளூராட்சி உதவி உத்தியோகத்தர், சபையின் உறுப்பினர் சந்திரதாஸ் விபூசனன், யூஸ் எயிட் திட்ட உத்தியோகத்தர். திருமதி. சுபத்திராவும் அகத்தின் திட்ட உத்தியோகத்தர் வே. மோகன் அவர்களும் கலந்து கொண்டமை சிறப்பு விடயமாகும்.

சபைகளின் செயலாளர் யாழினி பேசும் போது, அகத்தின் மூலம் பல்வேறு செயற்றிடங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களது இந்த திட்ட நடவடிக்கை காரணமாக பிரதேச சபைக்கும் மக்களுக்குமான தொடர்பாடல் அதிகரித்துள்ளது. மட்டுமன்றி மக்களுக்கும் சபைக்கும் இடையில் இருந்த இடைவெளி குறைந்துள்ளதை உணர்கின்றோம். எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திய அகம் நிறுவன முகாமைக்கு எமது மேலான நன்றிகளை தெரிவிக்கின்றோம் எனத்தெரிவித்தார். இதேகருத்தை உள்ளூராட்சி உதவி உத்தியோகத்தர் திரு. தயானந்தனும் தனது வரவேற்புரையில் சுட்டிக்காட்டினார்.

# கல்முனை றோட்டரிக்கழக புதிய தலைவர் பதவியேற்பு வைபவம்

**( வி.ரி.சகாதேவராஜா)**

கல்முனை றோட்டரிக் கழகத்தின் 22 வது தலைவராக றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் நாளை மறுநாள் 27 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பதவி பிரமாணம் செய்ய இருக்கின்றார். புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினது பதவியேற்பு வைபவம் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் இடம்பெற இருக்கிறது.

பிரதம அதிதியாக மாவட்ட ஆளுநர் றோட்டரி மாவட்ட ஆளுநர் றோட்டரியன் புவுது டி சொய்சா மற்றும் கௌரவ அதிதியாக காரைதீவுப்பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்பிக்க இருக்கிறார்கள் . இதன்போது இவ் வருடம் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது . புதிய தலைவராக நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கல்லாறு நிலைய பொறுப்பதிகாரிறோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன், புதிய செயலாளராக றோட்டரியன் கே.குகதாஸன், புதிய செயலாளராக றோட்டரியன் எம்.சிவபாத சுந்தரம் மற்றும் புதிய பணிப்பாளர் சபையினர் பதவியேற்க இருக்கிறார்கள்






# மலையக மக்களின் பிரச்சனைகளை இனம் காணாமல் தீர்வை முன்வைக்குமாறு கோருவது அர்த்தமற்ற அணுகுமுறை

**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களாகிய மலையக மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சனைகளை சரியாக இனம் காணாமல் தீர்வை முன்வைக்குமாறு கோருவது அர்த்தமற்ற அணுகுமுறையாகும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் வரவிருக்கின்ற இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்பதாக இலங்கையின் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் வடகிழக்கு மட்டுமல்லாமல் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன் வைக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் கருத்து வரவேற்கப்படக் கூடியது எனினும் மலையக மக்கள் எதிர் நோக்குகின்ற அடிப்படை அரசியல் பிரச்சினைகளை தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல் தீர்வை முன் வைப்பது நடைமுறைக்கு பொருத்தமற்றதாகும். அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உயர் மட்ட குழுவை சந்தித்து கலந்துரையாடியபோது மலையக மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்காக குழு ஒன்றை நியமிக்க போவதாக அறிவித்திருந்தார். ஆனால் அந்தக் குழு இதுவரை நியமிக்கப்படவில்லை. அவ்வாறு நியமிக்கப்பட்டால் அந்த குழு ஜனாதிபதி ஆணை குழுவாக இருக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். இந்த நிலையில் சில அரசியல் கட்சியின் தலைவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து கொண்டிருக்காமல் மலையக மக்களுக்கான தீர்வை முன் வையுங்கள் என்று கூறுகிறார்கள். மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல அரசியல் கட்சித் தலைவர்களுக்கே அடிமட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் தெளிவான பார்வை காணப்படவில்லை. ஒரு சில தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகளை வைத்துக்கொண்டு அதுதான் மலையகத்தின் பிரச்சினை என்று கூறுவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றல்ல. அத்துடன் மலையகத்தின் பிரச்சனையை ஒரு கட்சியோ அல்லது ஒரு குழுவோ வரையறுத்து கூறுவது முழுமையாகாது. ஒரு பொதுவான கலந்துரையாடலுக்கு விடயத்தை திறந்து விட வேண்டும். அதில் பல்வேறு தரப்பினரும் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும். எமது கோரிக்கைகள் ஒரு மூடிய அறையில் ஒரு வரையறுக்கப்பட்ட குழுவினரால் மட்டும் தயாரிக்கப்படுகின்ற அறிக்கையாக மட்டுமல்லாமல் அதில் மலையகத்தின் பல்வேறு தரப்பினரின் நடைமுறை பிரச்சனைகள் உள்வாங்கப்பட்ட முழுமையான கோரிக்கையாக அமைவது அவசியமானதாகும். இன்றைய மலையகம் என்பது ஒரு திறந்தவெளி சிறைச்சாலையை போன்றதாகும். மலையகத்தில் அடக்கு முறையும் இனவாதமும் மலிந்து போய் கிடக்கின்றன. மலையகத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை அரசு இயந்திரமும், தோட்ட நிர்வாகங்களும் தமிழ் சமூகத்தை எழும்ப விடாமல் அவர்களை முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் பாத்திரத்தையே வகித்து வருகின்றன. நாம் பெருந்தோட்ட காணிகளை தோட்ட குடியிருப்பாளர்களுக்கு பகிர்ந்து அளிக்குமாறு கூறுகிறோம். ஆனால் தோட்ட குடியிருப்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக குடியிருக்கும் வீடுகளுக்கும், வீட்டுத் தோட்டத்திற்கும், கால்நடை வளர்ப்புக்கான புத்தரைகளுக்கும் எந்த நேரத்திலும் அச்சுறுத்தல் வரலாம், அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகள் அரசகாணி சட்டத்திலே புகுத்தப்பட்டிருக்கின்றன. இது பற்றி பலருக்கு தெளிவில்லாமல் இருப்பதனால் தோட்டக் குடியிருப்பாளர்கள் சிறிது சிறிதாக பெரிதாக வெளியில் காட்டிக் கொள்ளாமல் தோட்டங்களை விட்டு வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக தகவல்களைத் தருமாறு தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கோறினாலும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தகவல் தர மறுக்கிறது. மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், சமூர்த்தி, விவசாய திணைக்களின் ஊடாக நடைபெறும் வேலை வேலைத்திட்டங்களில் மலையக மக்கள் மாற்றந்தாய் மனப்பான்மையுடன் நோக்கப்படுகிறார்கள். கல்வித்துறையிலும் இதே நிலை காணப்படுகிறது. மலையகத்துக்கு அரசியல் ரீதியான பிரதிநிதித்துவங்கள் தவிர்க்க



முடியாமல் வழங்கப்பட்டிருந்தாலும் அரச நிர்வாகத்துறையில் நாம் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். பெருந்தோட்ட பிரதேசத்தில் இருக்கின்ற காணிகளை அபகரித்துக் கொள்வதற்கு தென் இலங்கையிலுள்ள அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் அன்றாடம் வலம் வந்து கொண்டிருப்பதை நடைமுறை ரீதியாக பார்க்க முடிகிறது. ஆனால் தோட்டங்களில் விவசாயம் செய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் தமிழர்கள் அரச பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்போடு தோட்ட கம்பெனிகளினால் வெளியேற்றப்படுகிறார்கள். பல தொழிலாளர் விவசாய குடும்பங்கள் சட்டத்தின் முன்னிறுத்தி மூன்று நான்கு தலைமுறைகளாக வாழ்ந்த இடங்களையும் விவசாய நிலங்களையும் விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக போராடி போராடி ஓய்ந்து போய் இதுதான் எமது வாழ்க்கை என்று ஏற்றுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் தொகை தான் மலையகத்தில் ஏராளம். இந்த நிலையை மாற்றி அமைத்து மலையக மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவை கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று அமைவது அவசியமாகும். அந்த ஆணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமே தவிர ஒரு கட்சியினதோ அல்லது குழுவினரோ சிபாரிசு தான் மலையக மக்களின் பிரச்சினைகள் என ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கை வாழ் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்று உண்மையாக கருதினால் மேலும் மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தாமல் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றார்.

# வரம்புயர மரநடுகை செயற்திட்டத்தின் முதலாம் கட்டம்

சுவிஸ் அருள்மிகு சிவன் கோவில் சைவத்தமிழ்ச் சங்கத்தின் அன்பே சிவம் அமைப்பினால் வரம்புயர மரநடுகை செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 7ம் கிராமம் கணேஷா வித்தியாலயத்தில் அன்பே சிவம் அமைப்பின் தொண்டர்களான ஆசிரியர் விக்னேஸ்வரன் ரவிந்திரராஜ், ஆசிரியர் கணேஷ் லவன் மற்றும் இளம் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் ஆகியோரின் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இதில் பாடசாலையில் உள்ள அனைத்து மாணவர்களும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டதோடு, பாடசாலையைச் சுற்றி மரங்களும் நடுகைசெய்யப்பட்டது. இதில் பாடசாலையில் அதிபர் கந்தையா பேரானந்தம் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். அனர்த்தங்களினால் அழிந்து வரும் மரங்களை உருவாக்கும் நோக்கில் அன்பே சிவம் அமைப்பினால் 2014ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வரம்புயர மரநடுகை திட்டத்தின் மூலம் இதுவரை வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் 32000க்கு மேற்பட்ட மரங்களை நடுகை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோளாவில் பிரதேசத்தில் குளோபல் ரிலையன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் கம்பனியின் கிளை



**வி.சுகிர்தகுமார்**

அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தில் இயங்கிவரும் விஸ்ணு மகளிர் ஆடை உற்பத்தி கைத்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ள குளோபல் ரிலையன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் கம்பனியின் கிளை இன்று கோளாவில் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மக்களது பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்குடனும் விவசாயிகள் எதிர்கொண்டு வரும் உரம் மற்றும் நெல் விற்பனை தொடர்பான பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் தீர்வை பெற்றுக்கொடுத்தல் மற்றும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை இலக்காக கொண்டும் இக்கம்பனி கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கம்பனியின் பணிப்பாளர் த.ஜெயாகர் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் மற்றும் இந்து இளைஞர் மன்ற தலைவர் த.கயிலாயபிள்ளை ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி.குணாளன் தமிழ் இலக்கிய பேரவை தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி ஓய்வு நிலை அதிபர் தணிகாசலம் ஆலயத்தலைவர் ஏரம்பமூர்த்தி மகாசக்தி அமைப்பின் செயலாளர் திலகராஜன் மற்றும் சமூக அமைப்புக்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பூஜை வழிபாடுகளை கோளாவில் விக்னேஸ்வரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கௌரிசங்கர் குருக்கள் நடாத்தி வைத்தார். பின்னர் அதிதிகள் இணைந்து அலுவலகத்தை திறந்து வைத்ததுடன் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் திருமலையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு



# கல்முனை அல் பஹ்ரியாவில் அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர்களினால் ஒன்றினைந்த வேலைத்திட்டம்

**(சர்ஜ/ன் லாபீர்)**

கல்முனை அல்பஹ்றியா தேசிய பாடசாலையின் பாடசாலையின் அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப் பட்ட ஊரின் தனவந்தர்களின் உதவியினால் பாடசாலையில் சேதமடைந்து காணப்பட்ட தளபாடங்களை மீண்டும் சீரமைத்து புதிய தளபாடமாக மாற்றி அதனைபாடசாலை அதிபர் மற்றும் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு இன்று(25) பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் பைசால் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில்,பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எல்.எல்.ஏ ஹமீட், பழைய மாணவ சங்கத்தின் செயலாளர் எம்.ஐ.எம் ஜிப்ரிமற்றும் உறுப்பினர்கள் பாடசாலையின் பிரதி,உதவி அதிபர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். கல்முனை அல் பஹ்றியா பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்தி நடவடிக்கைகளின் அதிபரோடு இணைந்து பாடசாலை அபிவிருத்தி குழு மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன சிறப்பாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)



அமைவிடம்: திருகோணமலை வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# நிந்தவூர்- அட்டப்பள்ளத்தில் சட்டவிரோத பசளை கைப்பற்றல் : ஐவர் கைது



நிந்தவூர் பொலிஸ் பிரிவுற்குட்பட்ட அட்டப்பள்ளத்தில் களஞ்சியசாலையொன்றிலிருந்து சட்டவிரோத பசளை 1.5 டொன் சற்றுமுன்னர் கைப்பற்றப்பட்டுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு (3MIC) கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து அக்கரைப்பற்று விஷேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதியளிக்கப்பட்ட பசளையுடன் சட்டவிரோத பசளையைக் கலந்து பொதி செய்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இவர்கள் கையும் களவுமாக கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத பசளையும் கைப்பற்றப்பட்டு களஞ்சியசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரையும் சட்டவிரோத பசளையையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பிரதேசத்தில் அதிக பசளைத் தேவையுள்ளதுடன், விலை அதிகரிப்பினால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் கொள்ளைஇலாபமடையும்நோக்கில் இம்மோசடி இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

# வெருகல் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி



திருகோணமலை,வெருகல் பிரதேச பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 26 பேருக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு இன்று (24)வெருகல் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை மாணவர்களுக்கு வழங்கி வைத்தார்.

இப்பிரதேசத்தில் சில கிராமங்களை சேர்ந்த மாணவர்கள் தூரப்பிரதேசங்களில் இருந்து பாடசாலைக்கு வருகை தருவதுடன் போக்குவரத்து பிரச்சினைகளையும் முகங்கொடுத்திருந்தனர். இதனை நிவர்த்திக்கும் வகையில் வேல்ட் விசன் நிறுவனம் இத்துவிச்சக்கர வண்டிகளினை வழங்க அனுசரனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வெருகல் பிரதேச செயலாளர் எம். ஏ.அனஸ், திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# நுண்கலைத் துறையில் இளங்கலைஞர் விருது பெற்றார் சசிகுமார்



**ஹஸ்பர்**

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் தம்பலகாமம் பொற்கேணியை சேர்ந்த இரத்தினராசா சசிகுமார் நுண்கலைத் துறையில் இளங் கலைஞர் விருது பெற்றார். கிழக்கு மாகாண பண்பாட்டலுல்வல்கள் திணைக்களத்தினால் திருகோணமலை உவர்மலையில் அண்மையில் இதற்கான விருது வழங்கும் வைபவம் இடம் பெற்றது.இதில் கிழக்கு மாகாண ஆளுனர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நுண்கலைத் துறையில் 25 வருட கால அனுபவம் பெற்ற இ.சசிகுமார் அவர்கள் நுண்கலைத் துறையில் சிறப்பாக சேவையாற்றியமையை பாராட்டி தொடர்ந்தும் சமூகம்சார் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் முகமாக கிழக்கு மாகாண கல்வி ,விளையாட்டு ,பண்பாட்டலுவல்கள் ,இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் மூலமாக இளங்கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ் விருதினை பெறுவதற்காக வழிகாட்டியாக அமைந்த தம்பலகாமம் பிரதேச செயலாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர் உட்பட சகலருக்கும் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறார்.

# வாகன விபத்தில் வாழைச்சேனை பொலிஸ் உத்தியோகத்தர் பலி

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வாகன விபத்தில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்துச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு – கொழும்பு வீதி மியாங்குளம் பகுதியில் வைத்து நேற்று மாலை (24) இடம்பெற்றுள்ளது. கேகாலையிலுள்ள தனது வீட்டிலிருந்து கடைமைக்காக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பஸ் வண்டியுடன் மோதியதிலே பொலிஸ் உத்தியோகத்தர் ஸ்தலத்திலே மரணமடைந்துள்ளார். இவ்வாறு மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் 33 வயதுடைய அசங்க என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன்இ இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அங்கஜன் எம்.பிக்கு சுதந்திரக் கட்சியில் புதிய உயரிய பதவி

**த.சுபேசன்**

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். 21ஃ11 திங்கட்கிழமை சுதந்திரகட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற போதே குறித்த பதவி வழங்கப்பட்டுள்ளது. கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுடன்– விஜயலால் டிசில்வா மற்றும் பைசர் முஸ்தப்பா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை வரலாற்றில் இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.




